விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள் அந்தத் திட்டத்தின் அவசியம் கருதியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்கொள்கின்ற முயற்சியைக் கருதியும் திட்டத்தை விரைவிலே எடுத்துக்கொள்ள அரசு நிச்சயமாக ஆணையிடும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, காவிரி டெல்டாவை நவீனப்படுத்துகின்ற திட்டத்தில் அந்த காவிரி டெல்டாவினுடைய சீப் கன்ட்ரோல், அதைக் கட்டுப்படுத்துகின்ற நிலையம் சிதம்பரத்திலே இருக்கிறது, தெற்கு ராஜன் வாய்க்காலின் தண்ணீர்க் கட்டுப்பாட்டு நிலையமும்கூட சிதம்பரத்தில் இருப்பதால் இந்த காவிரி டெல்டாவை சீரமைப்பது சிரமமாக இருக்கிறது. ஆகவே அதை மாற்றி சீர்காழிக்கோ மாயவரத்திற்கோ கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கட்டுப்பாட்டு நிலையம் சிதம்பரத்திலே முறையாக செயல்படுகிறதா இல்லையா என்று தான் பரிசீலிக்க வேண்டுமே தவிர சிதம்பரத்திலிருப்பதை சீர்காழிக்கோ அல்லது மாயவரத்திற்கோ கொண்டுபோவது பற்றியல்ல. இப்போது அது சரியாக இருக்கிறது. கீழ்க் கொள்ளிடம் அணைக்கட்டு திட்டம், மற்றும் சேத்தியாத்தோப்பு அணைக்கட்டுத் திட்டத்தின் கீழ் வரும் வாய்க்கால்களை நவீனப் படுத்துவதற்காக உள்ள திட்டம் பற்றியது. ஏற்கெனவே அதற்கான புராஜக்ட் ட்ரிப் 18 கோடி ரூபாய் செலவிலே உள்ள திட்டச் சுருக்கத்தை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அதிலே இந்தப் பிரச்சினை வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 769 மற்றும் 770 ஆகியவை ஒன்றாகச் சேர்த்து எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன.

தமிழகத்தில் நிறுவப்படவுள்ள காகித ஆலைகள்.

*வினா எண் 769—திரு. செ. செம்மலை, திரு. ஏ. எம். சேதுராமன், திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், திரு. த. வேணுகோபால், திரு. இல. பலராமன், மற்றும் திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் கரும்பு சக்கையைப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கும் காகித ஆலைகள் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எந்தெந்த இடங்களில் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது?